மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவினை அறிமுகம் செய்கிறேன்.

8. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1993) ஆ.செ.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— (தொடர்ச்சி.)

(ஆ) இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வாகனங்கள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. .. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. .. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

53—143-40